# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 113 /பேரூ/2026**
**நாள் : 21.08.2026**

க. சண்முகம்,
கருப்பூர்,
சேலம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கருப்பூர் பேரூராட்சி,
சேலம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருப்பூர் அஞ்சல், 8/1-40, நாடார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. க. சண்முகம் என்பவரது 18.04.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.04.2026 அன்று பெறப்பட்டு, 113/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கருப்பூர் அஞ்சல், 8/1-40, நாடார் தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. க. சண்முகம் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 18.04.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். எங்கள் கருப்பூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக திரு. பிரகாஷ் என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவர் இதற்கு முன்னர் பணிபுரிந்த செயல் அலுவலர் திரு. மேகநாதன் என்பவர் ஓய்வு பெற்ற பின் ஏற்பட்ட காலி இடத்திற்கு இவர் கூடுதல் பொறுப்பு செயல் அலுவலராக பதவி வகித்து வருகிறார். இவருடைய முறையான பணியிடம் என்பது இளம்பிள்ளை பேரூராட்சியில் செயல் அலுவலர் ஆக பணி அமர்த்தியதில் இருந்து சட்டத்திற்கு புறம்பாகவே செயல்பட்டு வருகிறார். அரசியல்வாதிகளுக்கும், அரசியல் பிரதிநிதிகளுக்கும் ஆதரவாக பல சட்ட விதிகளுக்கு புறம்பாக கட்டிட உரிமங்கள், சொத்து வரி விதிப்பது மற்றும் தனியார் நிலத்தில் சாக்கடை வசதி செய்து தருதல், தனியாருக்கு மின் கம்பம் செய்து தருதல் போன்ற விதி மீறல்கள் செய்து வருகிறார். இவர் நிறைய விதிகளை மீறுவதால் நிறைய ஆதாயம் கிடைப்பதால் இவருடைய மேல் அதிகாரிகள் இவரை கருப்பூர் பேரூராட்சிக்கு முழு நேர செயல் அலுவலராக மாறுதல் வழங்கப்பட்டது.

இவர் கருப்பூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக பொறுப்பேற்றதிலிருந்து சட்ட விதிகளுக்கு புறம்பாக கட்டிடங்களுக்கு அனுமதி, விதிமீறிய கட்டிடங்களுக்கு வரி விதிப்பும்

செய்து வருகிறார். மேலும் தேவைப்படும் இடங்களில் அடிப்படை வசதி மேற்கொள்ளாமல் பேரூராட்சி பொறியாளர்களை வைத்து இவருடைய இஷ்டத்திற்கு பணிகளை செய்து வருகிறார். அங்கீகாரமற்ற மனை பிரிவு உரிமையாளர்களுக்கு அவர்கள் பயன் பெறும் வகையில் முகாந்திரங்களையும் ஏற்படுத்துவது போன்ற வகைகளில் பேரூராட்சி நிதியினை முறைகேடாக ஒரு சிலருக்கு பயன் பெறும் வகையில் பணிகளை மேற்கொண்டு வருகிறார். இதற்கு உதாரணம் கருப்பூர் பேரூராட்சியில் 15வது வார்டு பகுதியில் மேற்படி வார்டு உறுப்பினர் திருமதி. திவ்யா மற்றும் அவரது கணவர் உதவியுடன் கருப்பூர் சர்வே எண். 123/1G அங்கீகாரம் இல்லாமல் நிலங்களை மனை பிரித்து பாமர மக்களை ஏமாற்றி விற்பனை செய்து வரும் திரு. ராஜரத்தினம் என்பவர் பயன்பெறும் வகையில் நகர் ஊரமைப்பு துறையில் எவ்வித அனுமதியும் இன்றி தன்னிச்சையாக அவருடைய பட்டா நிலத்தினை பேரூராட்சிக்கு சாலை அமைப்பதற்கு ஏதுவாக ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகம் மூலம் தானமாக பெற்றுள்ளார்.

இதற்கு மேற்படி கருப்பூர் பேரூராட்சி உறுப்பினர் திருமதி. திவ்யா அவரது கணவர் மணிகண்டன் சாட்சியம் அளித்து பெற்றுள்ளார்கள். மேற்படி சாலை ஒப்படைப்பு பெறப்பட்டதற்கு ஆதாயமாக மேற்படி உறுப்பினர் அவரின் கணவர் திரு. மணிகண்டன் பெயரில் திரு. ராஜரத்தினம் என்பவரிடம் இருந்து நிலத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி பேரூராட்சி மன்ற உறுப்பினர் தற்பொழுது மனை பிரிவில் கட்டடம் கட்டவும் ஆரம்பித்துள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு பேரூராட்சி அனுமதி இல்லாமல் கட்டிடம் கட்டி வருகிறார். மேற்படி பகுதியில் கட்டிட உரிமம் வழங்க சட்ட ரீதியிலான வழிவகை இல்லாத நிலையில் வீடு கட்டி வரும் பேரூராட்சி மன்ற உறுப்பினர் மீது எந்தவித நடவடிக்கையும் மேற்கொண்டதாக தெரியவில்லை. மேலும் அதே பகுதியில் பேரூராட்சியின் நிதியின் மூலம் இரண்டு தனி நபர்களுக்கு சொந்தமான பட்டா நிலங்களில் நில உரிமையாளர்கள் பயன்பெறும் வகையில் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு ரூ.20 இலட்சம் மதிப்பில் பேரூராட்சி நிதியில் இருந்து சாக்கடை கால்வாய் பணியினை மேற்கொண்டு உள்ளார் என தெரிய வருகிறது. சர்வே எண். 124 மேலும் அதே பகுதியில் தனியார் பட்டா இடத்தில் ஐந்து மின் விளக்கு கம்பங்களை அமைத்து கொடுத்துள்ளார். இதன் மதிப்பு சுமார் ரூ.1.25 இலட்சம் என தெரிய வருகிறது.

எனவே வேலியே பயிரை மேய்ந்த கதையாக செயல் அலுவலர் மற்றும் மன்ற உறுப்பினர் இருவரும் செயல்பட்டு வருகிறார்கள். கருப்பூர் பேரூராட்சியில் சொந்த வருமானத்தில் ஆதாரமாகக் கொண்டு இயங்கும் ஒரு சுயநிதி அமைப்பாகும். இதில் எழை எளிய பாமர மக்கள் பயன்பெறும் வகையில் பணியை மேற்கொள்ளாமல் ஒரு சிலருக்கு சாதகமாக பேரூராட்சி நிதியினை விரையம் செய்வது என்பது அந்தப் பேரூராட்சி மக்களுக்கு பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் 15வது வார்டு உறுப்பினர் ஆகியோரின் துரோகம் ஆகும். ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல் மேற்படி முறைகேடுகளை விசாரணை செய்வதுடன் தங்களுக்கு வழங்கப்பட்டு இருக்கும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்த செயல் அலுவலர் திரு. பி. பிரகாஷ் மற்றும் உறுப்பினர் திருமதி. திவ்யா ஆகியோர் பல முறைகேடுகள் நடைபெற சாத்தியக்கூறுகள் இருப்பதினால் மேற்படி செயல் அலுவலரின் பணி காலத்தில் நடைபெற்ற திட்ட பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனவும் இவரால் வழங்கப்பட்ட கட்டிட உரிமங்கள் மற்றும் வரிவிதிப்புகள் ஆகியவற்றை ஆய்வு செய்யவும் இதற்கு உடந்தையாக இருந்த தொழில்நுட்ப பணியாளர்கள் மற்றும் மேல் அதிகாரிகள் மீதும் தணிக்கை அதிகாரிகள் மீதும் விசாரணை மேற்கொள்ள லஞ்சம் மற்றும் ஊழல் தடுப்புத் துறையினருக்கு சிபாரிசு செய்து எங்கள் பேரூராட்சி மக்களுக்கு நியாயம் கிடைக்க ஆவன செய்யுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட பணியின் மீது நாங்கள் கேள்வி எழுப்பும் போது எங்கள் மீது குண்டர்களையும் காவல்துறை மூலம் வழக்கு போடுங்கள் என பேரூராட்சி மன்ற உறுப்பினரின் கணவரை தூண்டி விடுகிறார் பேரூராட்சியின் செயல் அலுவலர். எனவே பேரூராட்சி உறுப்பினராக பதவியில் இருந்து கொண்டு தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து விதிகளுக்கு புறம்பாக

வீடு கட்டி வரும் உறுப்பினர் மீது விசாரணை செய்து பதவி நீக்க நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித்தலைவர் பரிந்துரை செய்யுமாறு கேட்டுக்கொள்வதுடன் இவ்வளவு முறைகேடு செய்யும் செயல் அலுவலர்களுக்கு மேற்கு 50 கிலோ மீட்டர் நீளமுள்ள வீரக்கல் பேரூராட்சிக்கும் கிழக்கு 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கெங்கவல்லி பேரூராட்சிக்கும் கூடுதல் பொறுப்புகள் வழங்கி பேரூராட்சி உதவி இயக்குநரும் இதற்கு உதவி செய்து வருகிறார் என்பதை இதன் மூலம் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன். இத்துடன் ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 6624/2025 மற்றும் மின் கம்பம் சாக்கடை கால்வாய் அமைத்த இடங்களின் ஜிபிஎஸ் புகைப்படம் இணைத்துள்ளேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 11.05.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 99/2026-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(i) கருப்பூர் கிராமம் சர்வே எண். 123/1ஜி1 மற்றும் 123/7பி1ஏ1 அமைந்துள்ள சாலையினை அப்பகுதி உரிமையாளர் திரு. ராஜரத்தினம் என்பவர் கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஒப்படைக்க விண்ணப்பித்ததை தொடர்ந்து, பேரூராட்சிமன்ற தீர்மானம் எண். 75(7) நாள் 31.07.2025ல் பேரூராட்சியின் மன்ற அனுமதி பெற்றப் பின்னர் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் தேவையினை கருத்தில்கொண்டு மேற்காணும் சாலையானது ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரவு பதிவு ஆவண எண். 6624/2025, நாள் 16.09.2025ஆம் தேதியன்று கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தான செட்டில்மெண்ட் செய்யப்பட்டது. இந்நிலையில் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சாலையினை தானமாக பெறுவதற்கு நகர் ஊரமைப்பு துறையிடம் அனுமதி பெற வேண்டும் என்று சட்ட விதிமுறைகள் ஏதும் இல்லை. மேலும் அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019ன்படி அப்பகுதியில் உள்ள மனைநிலங்கள் நகர் ஊரமைப்பு துறையினரால் அனுமதி பெறாத காரணத்தினால் அப்பகுதியில் எந்தவொரு மனைக்கும் கருப்பூர் பேரூராட்சியின் மூலம் அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் அம்மனை பிரிவிற்கு குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் போன்ற எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. உரிய விதிமுறைகளின்படியே மேற்காணும் சாலை நிலமானது பெறப்பட்டுள்ளதால் சட்ட விதிமுறை மீறல்கள் ஏதும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) கருப்பூர் பேரூராட்சி 15வது வார்டு பகுதியில் தங்கராஜ் வீடு அருகில், மேட்டுப்பதி நாடார் தெரு ராமசாமி உடையார் வீடு அருகில் மற்றும் அம்மாகண்ணு தோட்டம் ஆகிய பகுதிகளில் புதியதாக மின்கம்பம் அமைத்து மின் விளக்கு அமைக்க 15வது வார்டு மன்ற உறுப்பினரின் கடிதத்தினை பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் எண். 92(15) நாள் 30.09.2025ல் அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து கருப்பூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் மூலம் மேற்காணும் பகுதிகளை தல ஆய்வு செய்யப்பட்டது. அதன் பின்னர் மேற்காணும் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட சாலையினை ஒட்டி புதியதாக மின்கம்பம் அமைக்க தமிழ்நாடு மின்பகிர்மான இணையதளத்தில் கருப்பூர் பேரூராட்சியின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து உதவி செயற் பொறியாளர், இ(ம)ப, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், கருப்பூர் அவர்களால் மேற்காணும் 3 இடங்களும் ஆய்வு செய்யப்பட்டு 8 மின்கம்பங்கள் அமைக்க ரூ.1,15,730-/ செலுத்த 21.02.2026ஆம் தேதியன்று கேட்பு வரப்பெற்றது. அதன்படி 04.03.2026 அன்று மேற்காணும் தொகை மின்பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டு மின்கம்பம் அமைக்க கருப்பூர் மின் பகிர்மானத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தனியார் நிலத்தில் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டதாக புகார் மனு வரப்பெற்றது. ஏற்கனவே அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ள பொது சாலையினை ஒட்டியே அனைத்து மின்கம்பங்களும் மின்பகிர்மானம் கழகம் மூலம் அமைக்கப்படும். மேலும் ராமசாமி உடையார் வீடு அருகில் மின்கம்பங்கள் அமைக்க கருப்பூர் பேரூராட்சியின் மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்ட பின்னரே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் கருப்பூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தன்னிச்சையாக எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேற்காணும் இடத்தின் தல ஆய்வு செய்து அப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 500 குடும்பங்களின் பொது நலன் கருதியே மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மின்கம்பங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேலும் அனைத்து மின்கம்பங்களும் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுல்படுத்தப்படும் முன்னரே மின்பகிர்மானம் கழகம் மூலம் மின்கம்பங்கள் அமைக்கப்பட்டது. தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமுலில் உள்ளதால் நாளது வரை அப்பகுதியில் மின்கம்பங்கள் மட்டுமே அமைக்கப்பட்டு மின்விளக்கு அமைக்கப்படாமல் உள்ளது. எனவே ஏற்கனவே உள்ள பொது சாலையினை ஒட்டியுள்ள பகுதியிலேயே மின்விளக்கு அமைக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் எவ்வித ஆதாரமின்றியும், வருவாய் துறையின் மூலம் அளவீடு செய்யாமலும் பொய்யான புகார் மனுவினை அளித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(iii) மேலும் அப்பகுதியில் வரும் கழிவுநீர் அனைத்தும் அப்பகுதிலேயே நிலத்தில் சேகரமாகி பொதுமக்களுக்கு பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் சேகரமாகும் கழிவுநீரினை மழைநீர் வடிகால் அமைத்து வெளியேற்றம் செய்யப்பட்டது. இந்நிலையில் புதியதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகாலானது தனியார் நிலத்தில் வரப்பெற்றதாக புகார் மனு வரப்பெற்றது. அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் பொது சுகாதார நலன் கருதி ஏற்கனவே உள்ள சாலையினை ஒட்டி புதியதாக மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டது. இவற்றில் தனியர் நிலங்கள் உள்ளதாக எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை. எனவே ஏற்கனவே உள்ள பொதுசாலையினை ஒட்டியுள்ள பகுதியிலேயே மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் எவ்வித ஆதாரமின்றியும், வருவாய் துறையின் மூலம் அளவீடு செய்யாமலும் பொய்யான புகார் மனுவினை அளித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே கருப்பூர் பேரூராட்சியில் மேற்காணும் பகுதியில் பெறப்பட்ட சாலையானது உரிய விதிமுறைகளின்படி தானமாக பெறப்பட்டது. அப்பகுதியில் எவ்வித மனைகளுக்கும் கருப்பூர் பேரூராட்சியின் மனை ஒப்புதல் வழங்கப்படவில்லை. அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெருமின்விளக்குகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே மின்பகிர்மான கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகாலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரருக்கு மேற்காணும் நிலம் தனியார் நிலம் என சந்தேகம் ஏதும் இருப்பின் வருவாய் துறையின் மூலம் அளவீடு செய்துகொள்ள ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் மனுதாரர் கருப்பூர் பேரூராட்சியின் நிர்வாகத்தின் மீது உள்ள காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய்யான புகார் மனுவினை உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். எனவே உயர்திரு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்காணும் புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. க. சண்முகம் மற்றும் எதிர்மனுதாரரான கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 16.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.05.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. க. சண்முகம் என்பவரும் அவருக்கு உதவியாக திரு. A. பிரசன்னராஜ் என்பவரும் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

சேலம் மாவட்டம், கருப்பூர் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 123/1 Gல் திரு. ராஜரத்தினம் என்பவர் எவ்வித அங்கீகாரம் பெறாமல், நிலங்களை மனைகளாக பிரித்து விற்பனை செய்து வருகிறார். மேலும் இம்மனையில் நிலவியல் பாதை இல்லாமல் சாலை அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு துறையின் அனுமதியின்றி திரு. ராஜரத்தினம் என்பவரிடமிருந்து பட்டா நிலத்தை பேரூராட்சிக்கு ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகம் மூலம் தானமாக பெறப்பட்டுள்ளது. (பத்திர எண். 6624/2025)

இத்தானப் பத்திரத்தில் கருப்பூர் பேரூராட்சி மன்ற 15வது வார்டு உறுப்பினர் திருமதி. திவ்யா மற்றும் அவரது கணவர் திரு. மணிகண்டன் ஆகியோர் சாட்சியாக கையொப்பமிட்டுள்ளனர்.

இதற்கு ஆதாயமாக 15வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. திவ்யா என்பவரின் கணவர் திரு. மணிகண்டன் பெயரில் திரு. ராஜரத்தினம் என்பவரிடமிருந்து நிலத்தை கிரையம் பெறப்பட்டு, பேரூராட்சி கட்டட உரிமமின்றி முறைகேடாக கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் இதே பகுதியில் (சர்வே எண். 124) 2 தனி நபர்களுக்கு சொந்தமான இடத்தில் பேரூராட்சி நிதியின் மூலம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் சாக்கடை கால்வாய் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தவிர இதே பகுதியில் தனியார் பட்டா நிலத்தில் ரூ.1.25 இலட்சம் மதிப்பீட்டில் 5 மின்விளக்கு கம்பங்கள் பேரூராட்சி நிதியின் மூலம் அமைக்கப்பட்டுள்ளது.

எங்களுக்கு சொந்தமான நிலம் சர்வே எண். 123/7D தொடர்பாக வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் மின் கம்பம் அமைத்துள்ளனர். அதனை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய உரிமையை நாங்கள் கேட்கும்பொழுது உங்கள் மீது SC/ST வழக்கு தொடுப்பேன் என்று திருமதி. திவ்யா மற்றும் அவரது கணவர் மணிகண்டன் ஆகியோர் மிரட்டுகிறார்கள்.

எனவே பேரூராட்சிக்கு பெரும் நிதியிழப்பு ஏற்படும் வகையில் முறைகேடாக செயல்பட்டு வரும் 15வது வார்டு உறுப்பினர் திருமதி. திவ்யா மற்றும் பேரூராட்சி செயல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

6. எதிர்மனுதாரரான கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு. பா. பிரகாஷ், மற்றும் கருப்பூர் பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் திரு. ப. கௌதம் ஆகியோர் 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை அளித்துள்ளனர். அதில் –

- சேலம் மாவட்டம், கருப்பூர் கிராமம் சர்வே எண். 123/1ஜி1 மற்றும் 123/7பி1ஏ1ல் அமைந்துள்ள சாலையை அதன் உரிமையாளர் திரு. ராஜரத்தினம் என்பவரால் பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைக்க விண்ணப்பம் செய்ததை தொடர்ந்து, 31.07.2025 அன்று பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுமதி பெறப்பட்டது. (தீர்மானம் எண். 75(7) நாள் 3.07.2025) இதனை தொடர்ந்து 16.09.2025 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்யப்பட்டு தான செட்டில்மெண்ட் செய்யப்பட்டது. திரு. ராஜரத்தினம் என்பவரால் சர்வே எண். 123/1ஜி1 மற்றும் 123/7B1A1 உள்ள அவருக்கு பாத்தியப்பட்ட காலி இடத்தில் உள்ள நிலத்தினை மட்டுமே பேரூராட்சிக்கு தானமாக ஒப்படைத்துள்ளார். அப்பகுதியில் எவ்வித மனைபிரிவும் நாளதுவரை உருவாக்கப்படவில்லை.

- பேரூராட்சியின் 15வது வார்டு பகுதியில் தங்கராஜ் வீடு அருகில், மேட்டுப்பகுதி நாடார் தெரு, ராமசாமி உடையார் வீடு அருகில் மற்றும் அம்மாகண்ணு தோட்டம் ஆகிய பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெரு மின்விளக்குகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே மின் பகிர்மான கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதே போல் மழைநீர் வடிகாலும் எற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. கருப்பூர் பேரூராட்சியின் சாலை பதிவேட்டின் பக்கம் எண். 55ல் யூனிக் எண். DTP 101215001ன்படி மேட்டுப்பதி மூப்பர் தெருவானது 2008-2009 பொது நிதியின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதனை தொடர்ந்து 14வது நிதிக்குழு 2019-20ஆம் ஆண்டு மீண்டும் சிமெண்ட் சாலை அமைத்து அப்பகுதியிலுள்ள 500 குடும்பங்களும் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால் 50 ஆண்டுகளாக சாலைக்கு உரிமை கோராத மனுதாரர் அச்சாலையின் கடைசியில் மனைப்பிரிவு அமையவிருப்பதாக கூறி தனது சுய லாபத்திற்காக அச்சாலையினை பொதுமக்கள் பயன்படுத்தக் கூடாதென சாலையின் குறுக்கே இரும்பு கேட் அமைத்து பிரச்சனை உருவாக்கி வருகிறார். மனுதாரர் அவரது இடத்தில் அமையப்பெற்றதாக தெரிவித்துள்ள தெருமின்விளக்கானது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பெற்றதாகும். அவரது நிலத்தில் புதிய மழைநீர் வடிகாலோ புதிய தெருவிளக்கோ அமைக்கப்படவில்லை. எனவே மனுதாரர், திரு. ராஜரத்தினம் என்பவர் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக எவ்வித ஆதாரமின்றி புகாரினை தெரிவித்துள்ளார்.

- மேற்காணும் நிலையில், கருப்பூர் பேரூராட்சியில் பதிவு பெற்ற தானப்பத்திரம் மூலம் சாலை பெறப்பட்டதிலும், மின்கம்பங்கள் மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கப்பட்டதிலும் எவ்வித விதி மீறலும் மற்றும் முறைகேடும் நடைபெறவில்லை என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7. மனுதாரரின் புகார் மனு குறித்து, 16.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது, கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 16.06.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 99/2026ல் தனது கூடுதல் விளக்கத்தை அளித்துள்ளார். அதில் -

(i) கருப்பூர் கிராமம் சர்வே எண். 123/1ஜி1 மற்றும் 123/7பி1ஏ1 அமைந்துள்ள 706.25 ச.மீ. சாலையினை அந்நிலத்தின் உரிமையாளர் திரு. ராஜரத்தினம் என்பவர் கருப்பூர் பேரூராட்சி செயல்

அலுவலருக்கு ஒப்படைக்க விண்ணப்பித்ததை தொடர்ந்து பேரூராட்சி மன்ற தீர்மானம் எண். 75(7) நாள் 31.07.2025ல் பேரூராட்சியின் மன்ற அனுமதி பெற்றப் பின்னர் அப்பகுதியில் உள்ள பொதுமக்களின் தேவையினை கருத்தில் கொண்டு மேற்காணும் சாலையானது ஓமலூர் சார்பதிவாளர்அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திர பதிவு ஆவண எண். 6624/2025, நாள் 16.09.2025ஆம் தேதியன்று கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு தான செட்டில்மெண்ட் செய்யப்பட்டது.

மேலும் அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019ன்படி அப்பகுதியில் உள்ள மனை நிலங்கள் நகர் ஊரமைப்பு துறையினரால் அனுமதி பெறாத காரணத்தினால் அப்பகுதியில் எந்தவொரு மனைக்கும் கருப்பூர் பேரூராட்சியின் மூலம் அனுமதி வழங்கப்படவில்லை. மேலும் அம்மனைபிரிவிற்கு குடிநீர் வசதி, தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகால் போன்ற எந்தவொரு அடிப்படை வசதியும் செய்து தரப்படவில்லை. உரிய விதிமுறைகளின்படியே மேற்காணும் சாலை நிலமானது பெறப்பட்டுள்ளதால் சட்ட விதிமுறை மீறல்கள் ஏதும் இல்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) கருப்பூர் பேரூராட்சி 15வது வார்டு பகுதியில் தங்கராஜ் வீடு அருகில், மேட்டுப்பதி நாடார் தெரு ராமசாமி உடையார் வீடு அருகில் மற்றும் அம்மாகண்ணு தோட்டம் ஆகிய பகுதிகளில் புதியதாக மின்கம்பம் அமைத்து மின் விளக்கு அமைத்து தருமாறு 15வது வார்டு மன்ற உறுப்பினரின் கடிதம் வழங்கியதை தொடர்ந்து, அப்பகுதியினை தல ஆய்வு செய்து, அப்பகுதியில் தெரு விளக்கு அமைக்க மன்றத்தில் தீர்மான எண். 92 (15), நாள் 30.09.2025ல் அங்கீகரிக்கப்பட்டதை தொடர்ந்து தமிழ்நாடு மின்பகிர்மான இணையதளத்தில் கருப்பூர் பேரூராட்சியின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து உதவி செயற்பொறியாளர், இ (ம) ப, தமிழ்நாடு மின் பகிர்மான கழகம், கருப்பூர் அவர்களால் மேற்காணும் 3 இடங்களும் ஆய்வு செய்யப்பட்டு 8 மின் கம்பங்கள் அமைக்க ஓமலூர் சார்பதிவாளர்அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட்டில் கண்டுள்ளவாறு ரூ.1,15,730/- செலுத்த 21.02.2026ஆம் தேதியன்று கேட்பு வரப்பெற்றது. அதன்படி 04.03.2026ஆம் தேதியன்று மேற்காணும் தொகை மின்பகிர்மான கழகத்திற்கு செலுத்தப்பட்டு மின்கம்பம் அமைக்க கருப்பூர் மின்பகிர்மானத்தின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

(iii) மேலும் அப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்ட மழைநீர் வடிகாலில் வரும் கழிவு நீர் சரியாக வெளியேற்றம் செய்யப்படாமல் கழிவுநீர் அனைத்தும் அப்பகுதியிலே தேங்கி பொதுமக்களுக்கு பொது சுகாதார சீர்கேடு ஏற்படுவதால் அப்பகுதியில் சேகரமாகும் கழிவநீரினை 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ஏற்கனவே அமைக்கப்பட்ட மழைநீர் வடிகாலின் தொடர்ச்சியாக கூடுதலாக மழைநீர் வடிகால் அமைத்து கழிவுநீர் வெளியேற்றம் செய்யப்பட்டது.

சாலை பதிவேட்டின் பக்கம் எண். 55ல் ROAD UNIQUE NO – DTP 101215001ன்படி மேட்டுபதி மூப்பர் தெரு (முதல் குறுக்கு தெரு) 2008-2009 பொதுநிதி திட்டத்தின் கீழ் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதன் பின்னர் 14வது நிதிக்குழு 2019-2020ஆம் ஆண்டு மீண்டும் சிமெண்ட் சாலை அமைத்து மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

மேற்கண்டுள்ளவாறு வரிசை எண். (ii) மற்றும் (iii)ல் புதியதாக அமைக்கப்பட்ட தெருமின் விளக்கு மற்றும் மழைநீர் வடிகால் ஆகியவை மேற்கண்டுள்ள மக்கள் பயன்படுத்தி வந்த சிமெண்ட் சாலை ஒட்டியே ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ராமசாமி உடையார் வீடு அருகில் மின்கம்பங்கள் அமைக்க கருப்பூர் பேரூராட்சியின் மன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்ட பின்னரே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் கருப்பூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் தன்னிச்சையாக எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. மேலும் மேற்காணும் இடத்தினை தல ஆய்வு செய்து அப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 500 குடும்பங்களின் நலன் கருதியே மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மின்கம்பங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் வருவாய்த்துறை ஆவணங்களை பரிசீலனை செய்ததில், புதியதாக அமைக்கப்பட்ட மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு ஆகியவை மனுதாரரான திரு. சண்முகம் என்பவருடைய நிலத்தில் செல்லவில்லை. மழைநீர் வடிகால் மற்றும் தெருவிளக்கு அமையப்பெற்றுள்ள நிலத்திற்கும் மனுதாரருக்கும்

எவ்வித சம்பந்தமும் இல்லை. மேலும் மேட்டுபதி மூப்பர் தெரு என்ற சாலையானது 123/10 என்ற சர்வே எண்ணில் தொடங்கி 123/6 என்கிற கிராம நத்தம் வழியாக செல்கிறது. வருவாய் துறை ஆவணங்களின்படி சர்வே எண். 123/10 ஆனது சண்முகம் மற்றும் 9 பெயர்கள் கொண்ட கூட்டுப்பட்டாவில் உள்ளது. மேட்டுபதி மூப்பர் தெரு என்ற சாலையானது சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்னர் இருந்து சாலையாக பயன்படுத்தப்பட்டு வரப்பெற்று மண்சாலையாக இருந்து 2008-09ஆம் ஆண்டு பேரூராட்சியின் பொது நிதியின் கீழ் சிமெண்ட் சாலையாக அமைக்கப்பட்டு 2019-20ஆம் ஆண்டில் 14வது நிதிக்குழு திட்டத்தின் கீழ் மீண்டும் சிமெண்ட் சாலை அமைத்து மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

ஆனால் அதுநாள் வரை சாலைக்கு உரிமை கோராத மனுதாரர் அச்சாலையின் கடைசியில் புதியதாக மனைப்பிரிவு அமையப்பெற்ற உடன் அச்சாலையினை பொதுமக்கள் பயன்படுத்தக் கூடாது என சாலையின் குறுக்கே இரும்பு கேட் அமைத்தார். அதன் பின்னர் காவல் துறை உதவியுடன் பேரூராட்சியின் மூலம் கேட் அகற்றப்பட்டு பொது மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே கருப்பூர் பேரூராட்சியில் மேற்காணும் பகுதியில் பெறப்பட்ட சாலையானது உரிய விதிமுறைகளின்படி தானமாக பெறப்பட்டது. அப்பகுதியில் எவ்வித மனைகளுக்கும் கருப்பூர் பேரூராட்சியின் மனை ஒப்புதல் வழங்கப்படவில்லை. அப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெருமின் விளக்குகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே மின்பகிர்மான கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. மழைநீர் வடிகாலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் அப்பகுதியில் புதியதாக உருவாக்கப்பட்டு வரும் மனைப்பிரிவு உரிமையாளரிடம் கொண்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக 50 ஆண்டுகளாக பயன்படுத்தி வரும் சாலையானது தனது சாலை என கூறி அப்பகுதியில் பொதுமக்களின் நலனுக்காக அமைக்கப்பட்ட தெருவிளக்கு மற்றும் மழைநீர் வடிகாலினை அகற்ற முற்பட்டு வருகிறார். எனவே உயர்திரு உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் மேற்காணும் புகார் மனுவினை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கைகள் மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. க. சண்முகம் என்பவர் தனது புகார் மனுவிலும் மற்றும் வாக்குமூலத்திலும் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது.

(i) கருப்பூர் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 123/1Gல் திரு. ராஜரத்தினம் என்பவர் எவ்வித அங்கீகாரமின்றி நிலங்களை மனைகளாக பிரித்து விற்பனை செய்து வரும் நிலையில், இம்மனையில் நிலவியல் பாதை இல்லாமல் சாலை அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு துறையின் அனுமதியின்றி, திரு. ராஜரத்தினம் என்பவரிடமிருந்து பட்டா நிலத்தை ஓமலூர் சார் பதிவாளர் அலுவலகம் மூலம் பேரூராட்சிக்கு தானமாக பெறப்பட்டுள்ளது.

(ii) 15வது வார்டு பேரூராட்சி மன்ற உறுப்பினர் திருமதி. திவ்யா என்பவரின் கணவர் திரு. மணிகண்டன் பெயரில் திரு. ராஜரத்தினம் என்பவரிடமிருந்து நிலத்தை கிரையம் பெற்று, பேரூராட்சியின் கட்டட அனுமதியின்றி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

(III) சர்வே எண். 124 பகுதியில் 2 தனி நபர்களுக்கு சொந்தமான இடத்தில் பேரூராட்சி நிதி மூலம் ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் சாக்கடை கால்வாய் பணி மேற்கொள்ளப்பட்டும், இதே பகுதியில் தனியார் பட்டா நிலத்தில் ரூ. 1.25 இலட்சம் மதிப்பீட்டில் 5 மின்விளக்கு கம்பங்கள் பேரூராட்சி நிதியின் மூலம் முறைகேடாக அமைக்கப்பட்டுள்ளது.

(iv) மனுதாரருக்கு சொந்தமான நிலம் சர்வே எண். 123/7D தொடர்பாக வழக்கு (வழக்கு எண். O.S. No. 360/2025) ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் பேரூராட்சியால் மின்கம்பம் அமைக்கப்பட்டதை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கு கருப்பூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையிலும் மற்றும் வாக்குமூலத்திலும் கீழ்க்கண்டவாறு தெரிவித்திருப்பதை அறிய முடிகிறது.

(1) கருப்பூர் கிராமம் சர்வே எண். 123/1ஜி1 மற்றும் 123/7பி1ஏ1ல் அமைந்துள்ள சாலையை அதன் உரிமையாளரான திரு. ராஜரத்தினம் என்பவர் அவருக்கு பாத்தியப்பட்ட காலியிட நிலத்தையே ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திர பதிவு செய்து பேரூராட்சிக்கு தானமாக வழங்க விண்ணப்பம் செய்து, அதை பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் நிறைவேற்றப்பட்டு, தானமாக பேரூராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(2) மேற்காணும் பகுதியில் எவ்வித மனைபிரிவும் நாளது வரை உருவாக்கப்படவில்லை.

(3) 15வது வார்டில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் புதிதாக தெரு மின் விளக்குகள் அமைக்கப்பட்டது தொடர்பாக ஏற்கனவே மின்விளக்குகள் அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே மின் பகிர்மான கழகம் மூலம் அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று மழைநீர் வடிகாலும் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள சாலையினை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. மனுதாரரது நிலத்தில் புதிய மின்விளக்கோ மற்றும் மழைநீர் வடிகாலோ அமைக்கப்படவில்லை.

இந்நிலையில், மனுதாரர் " புகாராக தெரிவிக்கும் இனங்களில், தங்களுக்கு சொந்தமான நிலம் சர்வே எண். 123/7D தொடர்பாக வழக்கு (வழக்கு எண். O.S. No.360/2025) மாண்பமை ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில் மின்கம்பம் அமைத்துள்ளனர் எனவும் அதனை அகற்றிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளதை மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அவர் சமர்ப்பித்த ஆவணம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது.

<u>Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014</u>

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to;-

(a) xxx xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act. 1952 or any matter pending before a Court;

இந்நிலையில் மனுதாரர் தனது வாக்குமூலத்தில் புகாராக தெரிவிக்கும் மனுதாரருக்கு சொந்தமான நிலம் சர்வே எண். 123/7D தொடர்பாக மனுதாரரால் தொடுக்கப்பட்ட வழக்கு ஓமலூர் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கும்போது 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி மனுதாரரின் 18.04.2026 நாளிட்ட புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால் இப்புகார் மனு தொடர்பான மேல்நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 21 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. க. சண்முகம்,
8/1-40, நாடார் தெரு, கருப்பூர் அஞ்சல்,
ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம் - 636 012.
2. செயல் அலுவலர்,
கருப்பூர் பேரூராட்சி, சேலம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர்,
சென்னை–600 028

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/8/26

செயலாளர்

24/8/26